நகராட்சி அலுவலகம்,
களக்காடு.
நாள். 31.07.2025.

களக்காடு நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 01ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

| **நாள்.** | **தீர்மான எண்.** | **மன்ற பொருள்** | **மன்றத்தின் முடிவு** |
|---|---|---|---|
| 01.08.2025 | 643 | **<u>மன்றப்பொருள்:01</u>**<br>மாண்புமிகு தமிழக முதலைமைச்சரின் காலை உணவு திட்டம் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளதால் அதன் பொருட்டு இந்நகராட்சிக்குட்பட்ட 11 பள்ளி மாணவ மாணவியர்கள் பயன்பெற உள்ளனர், அத்தகைய காலை உணவு தயாரிக்கும் கோவில்பத்து பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்மான பொது சமயலறையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாதலால் அதற்காக ரூ. 1.60 இலட்சம் உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள ஒப்புக்கொள்ளலாம். ந.க.எண். 1786/2025/இ1 | சட்டப்படி செலவிட அனுமதி அளிக்கப்படுகிறது. |
| 01.08.2025 | 644 | **<u>மன்றப்பொருள்: 02</u>**<br>களக்காடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள பழைய கழிப்பறைகள் பராமரிப்பு மற்றும் புதிதாக டீசல் ஜென்செட் நிறுவுதல், தரைத்தளங்களை புதுபித்தல், மேஜைகள் அமைத்தல், இடிதாங்கி அமைத்தல் போன்ற அத்தியாவசியமான பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இப்பணிகளை மேற்கொள்ள ரூ. 19.00 இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள ஒப்புக்கொள்ளலாம்.<br>ந.க.எண். 1785/2025/இ1 | சட்டவிதிமுறைகளை பின்பற்றி செலவிட அனுமதி அளிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>01.08.2025</td>
<td>645</td>
<td>
<u>மன்றப்பொருள்: 03</u>
களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.06 வடமலை சமுத்திரம் மற்றும் வார்டு எண்.10 சிவசண்முகபுரம் பகுதியில் பிரதான குடிநீர் குழாய்களில் பழுது ஏற்பட்ட பகுதிகளில் புதிதாக குழாய் அமைக்கும் பணிக்கு 30.06.2025 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர்கள்</th><th>கூடுதல் குறைவு.</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி வார்டு எண். 06 வடமலை சமுத்திரத்திற்கு செல்லும் பழுதான PVC பிரதான குடிநீர் குழாயினை புதிதாக மாற்றியமைத்தல் மற்றும் வார்டு எண். 10 சிவசண்முகபுரம் (தெற்கு தெரு) பகுதிக்கு செல்லும் பழுதான பிரதான PVC குடிநீர் குழாயினை புதிதாக மாற்றியமைத்தல் பணி.</td><td rowspan="2">2.25</td><td>திரு. J.ஐஸ்டின் பிரதீப்.</td><td>4.01% (கூடுதல்)</td></tr>
<tr><td>திருமதி. என்.எம் புஷ்பம்</td><td>0.17% (குறைவு)</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>:
குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம். (ந.க.எண்.478–8/2025/இ1
</td>
<td>ஒப்புக் கொள்ளப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 01.08.2025 | 646 | **<u>மன்றப்பொருள்: 04</u>**<br>களக்காடு நகராட்சியில் 6வது மாநில நிதிக்குழு மான்யத்திட்டம் 2022–2023ன் கிழ் ரூ. 133.00 இலட்சம் மதிப்பீட்டில் பழைய நகராட்சி அலுவலகத்தில் வணிக வளாகம் கட்டுவதற்கு நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.34832/2023/எம்ஏ1 நாள். 06.02.2024ன்படி நிருவாக அனுமதி வழுங்கப்பட்டு வணிக வளாக கட்டிடம் ஜவஹர் வீதி பகுதியில் தரைத்தளம் 6 கட்டிடங்கள் மற்றும் முதல் தளம் 6 கட்டிடங்கள் என மொத்தம் 12 கடை கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றது.<br>களக்காடு நகராட்சியில் 6வது மாநில நிதிக்குழு மான்யத்திட்டம் 2023–2024ன் கீழ் ரூ. 150.00 இலட்சம் மதிப்பீட்டில் வியாசராஜபுரம் அண்ணா சாலை பகுதியில் வணிக வளாகம் கட்டுவதற்கு நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் யெல்முறை ஆணை ந.க.எண். 34832/2023/எம்ஏ1 நாள். 11.03. 2024ன்படி நிருவாக அனுமதி வழுங்கப்பட்டு, வணிக கட்டிடம் வியாசராஜபுரம் அண்ணாசாலை பகுதியில் தரை தளம் 16 கடை கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றது.<br>மேற்படி இரண்டு பகுதிகளில் கட்டப்படுகின்ற வணிக வளாக கடைகளை பொது ஏலம் விட முன்கூட்டியே நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u>:<br>நகராட்சி பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்படும் வகையில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், நகராட்சி வருவாயினை பெருக்குவதற்கு வணிக வளாக கடைகளை குத்தகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர நடைமுறைகளை பின்பற்றி முன் ஏலம் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அரசு விதிப்படி செயல்பட அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 01.08.2025 | 647 | **<u>மன்றப்பொருள்: 05</u>**<br>அரசாணை (நிலை) எண்.97, வருவாய்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள். 21.02.2025–ன் படி நான்குநேரி வட்டம், களக்காடு குறுவட்டம், களக்காடு பகுதி 1 கிராமத்தில் நத்தம் அரசு புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி பத்து ஆண்டுகளுக்கு மேல் வசித்துவரும் திரு. நடராஜன் மற்றும் 15 நபர்களுக்கு நத்தம் அரசு புறம்போக்கு புல எண்.1363/16, 1341/29, 1341/52, 1280/2, 1267/1, 478/6, 1348/4, 1405/4, 1388/12, 1388/17, 1342/3, 1342/7, 296/1 மற்றும் 1437/4 நிலத்திற்கு நத்தம் பட்டா வழங்க நகராட்சியில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்பதற்கான நகராட்சி தீர்மான நகல் வழங்குமாறு வருவாய் ஆய்வாளர், களக்காடு குறுவட்டத்திலிருந்து கோரப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட நத்தம் அரசு புறம்போக்கு புல எண்.1363/16, 1341/29, 1341/52, 1280/2, 1267/1, 478/6, 1348/4, 1405/4, 1388/12, 1388/17, 1342/3, 1342/7, 296/1 மற்றும் 1437/4 நிலத்திற்கு நத்தம் பட்டா வழங்க இந்நகராட்சியினை பொறுத்தவரை எவ்வித ஆட்சேபனையும் இல்லை என வருவாய்துறைக்கு அறிக்கை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி புல எண்ணில் உள்ள நபர்களுக்கு வருவாய் துறை மூலம் பட்டா வழங்க ஆட்சேபனை இல்லை என தீர்மானிக்கலாம். ந.க.எண். 1799/2025/எப்1 | அரசு விதிப்படி செயல்பட அனுமதிக்கப்பட்டது. |